TAMIL NADU LEGISLATURE LIBRARY
11 FEB 1974
MADRAS

தமிழ்நாடு சட்ட மன்ற மேலவை.

செவ்வாய்க்கிழமை, 1973 டிசம்பர் 4.

சென்னை, செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக் குறியிட்ட வினாக்கள்.

Special Chest Clinic in Stanley Hospital, Madras.

*** 193Q—Thiru G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—**

(a) whether it is a fact that a special Chest Clinic is functioning in Stanley Hospital, Madras ; and

(b) if so, the number of cases attended to by the same during the last three years ?

சென்னை, ஸ்டான்லி மருத்துவ மனையில் இருதய நோய் மருத்துவச் சிறப்புப் பிரிவு.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) சென்னை, ஸ்டான்லி மருத்துவ மனையில் இருதய நோய் மருத்துவச் சிறப்புப் பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், கடந்த 3 ஆண்டுகளில் அந்த மருத்துவப் பிரிவு எத்தனை பேருக்கு சிகிச்சை அளித்தது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ)

ஆண்டு	சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை.	
1969	13,775	பழையனவும் புதியனவும்.
1970	30,321	,,
1971	25,740	,,
1972	24,722	,,
1973 .. .. .. (ஆகஸ்டு வரை).	15,711	,,

THIRU G. SWAMINATHAN : Mr. Chairman, Sir, may I know how many Civil Surgeons and Assistant Surgeons are looking after these patients in that Clinic ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இது பற்றி விளக்கம் இல்லை. நான் அறிந்த வரையில் ஆனரரி பேராசிரியர் ஒருவரும், ஒரு அரசாங்கத் துணை மருத்துவரும் (அஸிஸ்டென்ட் சர்ஜன்) இடம் பெற்றிருக்கிறார்கள்.

Barbers and Dhobies affected by Floods.

* 197Q.—THIRU M. MASILAMANI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of families of Barbers and Dhobies affected by the floods in Tamil Nadu during 1972 ;

(*b*) the assistance rendered by the Government to them ; and

(*c*) the number of houses affected ?

வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்ட முடிதிருத்துவோர், சலவையாளர்கள்.

திரு. மு. மாசிலாமணி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் தமிழ் நாட்டில் பாதிக்கப்பட்ட முடிதிருத்துவோர், சலவையாளர் குடும்பங்கள் எத்தனை ?